[22nd July 1964

திரு. மீ. கலியாணசுந்தரம்: வெற்றிலை நோய் தடுப்பு நடவடிக்கையாக ஒரு திட்டம் அமைந்திருக்கிறது என்று சொன்னார்கள். அந்தத் திட்டத்தின் விவரம் என்ன என்று அறிய முடியுமா?

கனம் திரு. பூ. கக்கன்: வெற்றிலை நோய் தடுப்பு சம்பந்தமாக அதிகாரிகள் ஒன்று கூடி எடுத்திருக்கும்படியான திட்டம்தான்.

திரு. கே. பொன்னையன்: வெற்றிலை விவசாயம் நம் நாட்டில் மட்டுந்தான் நடைபெறுகிறதா அல்லது வேறு நாடுகளிலும் நடைபெறுகிறதா? வேறு நாடுகளில் வெற்றிலைக் கொடிக்கால் இருக்குமானால் உயர்ந்த ரகமான கொடிகளை வரவழைத்து விவசாயிகளுக்குக் கொடுக்க முன் வருவார்களா?

கனம் திரு. பூ. கக்கன்: நமது நாட்டில் மட்டுந்தான் வெற்றிலைக் கொடிக்கால் இருப்பதாகத் தெரிகிறது. நான் சைனாவுக்குப் போயிருந்தபோது அங்கு நான் வெற்றிலைக் கொடிக்காலைப் பார்க்கவில்லை.

திரு. இரா. நெடுஞ்செழியன்: வெற்றிலைக் கொடிகள் பாதுகாப்புக்கும் வளர்ச்சிக்கும் வழிவகைகள் எடுத்துக் கொள்ள ஆராய்ச்சி நிலையம் இருக்கிறதா? இல்லையென்றால் நிறுவ உத்தேசம் உண்டா?

கனம் திரு. பூ. கக்கன்: அந்தத் தகவல் என்னிடத்தில் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்கிறேன்.

சங்குத் தொழிற்சாலை

* 613 **கேள்வி—திரு. கரு. சீமைச்சாமி:** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

கிழக்கு இராமநாதபுரத்தில் சங்குத் தொழிற்சாலை ஏற்படுத்த அரசினருக்கு உத்தேசமுண்டா?

THE HON. SRI R. VENKATARAMAN: The matter is under the consideration of the Government.

Penal water rate (Lower Bhavani Project)

* 614 Q.—SRI A. S. DAKSHINAMOORTHY GOUNDER: Will the Hon. the Minister for Works be pleased to state—

(a) whether there is any proposal before the Government to collect penal water rate from the poor agriculturists who are cultivating paddy from this year under the Lower Bhavani Project Area; and

(b) if so, whether the Government are aware that this will result in great hardship to them?

22nd July 1964]

THE HON. SRI V. RAMAIAH : (a) Penal water-cess will be collected from those who raise paddy in the Lower Bhavani Project Area on lands in which paddy was not grown in any of the three faslis 1369, 1370 or 1371 but is cultivated with paddy in Faslis 1372 or 1373.

(b) Penal water-cess, as the term implies, is a penalty to be levied only if paddy is cultilvated in violation of the orders of Government in force. As such, no avoidable hardship is likely to result.

திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர் : எந்தெந்த நிலங்களில் என்னென்ன பயிரிட வேண்டுமென்ற நிலைமையை விவசாயிகளிடம் விட்டு விடுவது நல்லது என்பதைச் சர்க்கார் உணரவில்லையா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : அவ்வாறு விட்டு விடுவது நல்லது தான். லோயர் பவானி பிராஜக்டைப் பொறுத்தவரை திட்டம் உருவாவதற்கு முன்பே என்னென்ன விவசாயப் பொருள்கள் உற்பத்தி செய்ய வேண்டுமென்று நிர்ணயம் செய்திருக்கிறோம். நெல் சாகுபடி மாத்திரமல்லாமல் இந்த மாகாணத்தின் மொத்தமான பொருளாதாரத் தேவைக்குத் தகுந்தவாறு பல்வேறு பொருள்களை அங்கு உற்பத்தி செய்யவேண்டுமென்பது அந்தத் திட்டத்தின் நோக்கம். அந்த வகையில் பருத்தி, வேர்க்கடலை போன்றவற்றை அங்கே பயிரிட வேண்டுமென்பது அரசாங்கத்தின் நோக்கம். ஆனால் விவசாயிகள் அதற்குத் தகுந்த ஒத்துழைப்புக் கொடுக்காமல் நெல் சாகுபடி செய்து வருகிறார்கள். அரசாங்கம் அவர்களுடைய விருப்பத்திற்குக் கூட ஓரளவு இணங்கி அந்த நிலைமை தளர்த்தப்பட்டு நெல் சாகுபடி செய்ய அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. ஆயினும் பரிபூரணமாக நெல்லே சாகுபடி செய்து கொண்டிருந்தால் அது நம்முடைய மாகாணத்திற்கு நல்லது அல்ல என்ற காரணத்தால் பெனல்டி போட்டால் அதில் தவறில்லை.

திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர் : எந்தெந்தச் சமயத்தில் என்னென்ன வெள்ளாமை செய்தால் தனக்குக் கட்டுப்படியாகும் என்ற நிலைமையை அனுசரித்து விவசாயிகள் வெள்ளாமை செய்கிறார்கள். சர்க்காரால் எடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கையானது அந்த ஒரு முறைக்குப் பாதகம் விளைவிக்கும் என்பதைச் சர்க்கார் உணருமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : இந்த உப கேள்விக்குப் பதில் அளிக்கும் வகையில் இந்தப் பிரச்சினையை விளக்க விரும்புகிறேன். சென்னை ராஜ்யத்தில் புதியதாக ஏற்படுத்தப்படக்கூடிய ஒவ்வொரு பாசனத் திட்டமும் நெல் சாகுபடிக்கு என்ற அடிப்படையில் இல்லை. இதர தானியங்களையும் உற்பத்தி செய்தாகவேண்டும். அந்த அடிப்படையில் இந்த லோயர் பவானித் திட்டம் மட்டுமல்ல; தற்போது வேலை நடந்து வரும் பரம்பிக்குளம் ஆளியாறு திட்டப் பகுதியிலும் நெல் தவிர மற்றப் பொருள்களையும் சாகுபடி செய்ய வேண்டுமென்று திட்டமிடப்பட்டிருக்கிறது. அதே போன்றே

22nd July 1964]

திருநெல்வேலி கன்னியாகுமரி பகுதியில் சித்தாறு பட்டணங்கால் திட்டப் பகுதியிலும் நெல் சாகுபடி மட்டுமல்லாமல் இதர தானியங்களையும் கண்டிப்பாகச் செய்யவேண்டுமென்று செய்திருக்கிறோம். அப்படிச் செய்தால்தான் நம்முடைய மாகாணத்திற்கும், விவசாயிகளுக்கும் நல்லது. போதுமான முயற்சி எடுத்துக் கொண்டால் எந்தப் பொருளை வேண்டுமானாலும் அந்தக் கால நிலைக்குத் தகுந்தவாறு உற்பத்தி செய்ய முடியும். அவ்வாறு மற்றப் பொருள்களைப் பயிர் செய்ய முடியும், பயிர் செய்வதுதான் நல்லது என்று நிபுணர்கள்கூட கூறியிருக்கிறார்கள். நேற்றைய தினம் அமெரிக்காவில் இருந்து வந்து நிபுணர்கள் தஞ்சை ஜில்லாவைப் பார்வையிடச் சென்றிருக்கிறார்கள். நஞ்சையில்கூட மற்றப் பொருள்களைப் உற்பத்தி செய்வது பற்றி பரிசீலனை செய்யப்படுகிறது.

திரு. மீ. கலியாணசுந்தரம்: கீழ் பாவானித் திட்டம் பருத்தி உற்பத்தியை அதிகப்படுத்த வேண்டுமென்ற குறிக்கோளுடன் ஆரம்பிக்கப்பட்டது என்பதை ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் இருக்கிற பிரச்சினை பருத்தியா, நெல்லா என்பதைப் பற்றியல்ல. அங்கு நெல் சாகுபடி செய்தவர்களுக்குத் தண்டத் தீர்வை போடப்படுவது பற்றிய பிரச்சினை இருக்கிறது. வாட்டர் சீப்பேஜ் நெருக்கடியால் விரும்பினால் கூடப் பருத்தி சாகுபடி செய்யமுடியாது. ஆகவே, தீர்வை வசூலிக்கப்படுவது நிறுத்தப்படுமா ?

கனம் திரு. வெ. ராமையா : சீப்பேஜ் பிராப்ளத்தைப் பொறுத்தவரை அதிகமான கஷ்டம் இருக்குமென்று கருதவில்லை. அதற்கெல்லாம் போதுமான கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. கிராப் ரெஸ்ட்ரிக்ஷன் இல்லையென்று நினைக்கிறேன். கனம் அங்கத்தினர் கேள்வி போட்டால் மீண்டும் பரிசீலனை செய்து சொல்ல முடியும். இப்போது இங்கே இருக்கும் பிரச்சினை மேட்டு பூமியைப் பள்ளப்படுத்த அங்கே நெல்சாகுபடி நடந்து வருகிறது என்பதுதான்.

திரு. சா. கணேசன் : தமிழகத்தைப் பொறுத்தவரை பிரதான உணவாக இருக்கிற அரிசி போதுமான அளவு இல்லாமல் இருப்பதால் நெல் விளைச்சலுக்கு முக்கியத்துவம் கொடுத்து அதற்குத் தண்டனை இல்லாமல் மேற்கொண்டு அவர்களுக்கு வேண்டிய சலுகைகளைச் செய்து கொடுக்கவேண்டுமென்ற உண்மையை, தேவையை அரசாங்கம் உணர்ந்து செயற்படுமா ?

கனம் திரு. வெ. ராமையா : கனம் அங்கத்தினர் கூறுகின்ற உண்மையை அரசாங்கம் முழுக்க முழுக்க உணர்ந்துதான் திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டு வருகிறது. கணிசமான பகுதி நெல் உற்பத்திக்குதான் போகிறது. அதனால் மற்றப் பொருள்களின் உற்பத்தி தேவையில்லை என்று சொல்வது சரியல்ல. கூடுமான வரையிலும் மற்றப் பொருள்களையும் செய்வதுதான் நம்முடைய மாகாணத்திற்கு மட்டுமல்ல தேசத்திற்கே நல்லது. பொருளாதார அடிப்படையில் பார்த்தால் நெல்லோடு பருத்தி, வேர்கடலை போன்றவற்றையும் உற்பத்தி செய்வது மிகவும் அவசியமாகும்.

22nd July 1964]

திரு. சா. கணேசன் : பருத்தி உற்பத்தி புஞ்சை நிலங்களிலும் செய்யக்கூடிய வாய்ப்பு இருக்கின்ற காரணத்தால், நெல் மகப் பெரும்பாலும் நஞ்சையில் மட்டும்மே உற்பத்தி செய்யக் கூடுமாதலி ருமல், நஞ்சை நிலங்களில் பருத்திக்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுக்காமல் நெல் போன்ற உணவு தானியங்களுக்கே முக்கியத் துவம் கொடுக்க அரசாங்கம் முன் வருமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : நெல்லுக்கு முக்கியத்துவம் கொடுப்பதில் அபிப்பிராய பேதம் இல்லை. ஆனால் பருத்தி வெறும் புஞ்சைப் பயிராகத்தான் இருக்கவேண்டுமென்றுல் அதை எந்த நிபுணரும் ஒத்துக் கொள்வதில்லை. பருத்தியையும் பாசன அடிப் படையில் நாம் உற்பத்தி செய்யத் தொடங்கினுல் மகசூல் அதிக மாகக் கிடைக்கிறது. ஒரு ஏக்கர் நெல்லுக்குக் கொடுக்கக்கூடிய தண்ணீரைக் கொண்டு இரண்டு அல்லது மூன்று ஏக்கர் பருத்தி சாகுபடி செய்ய முடியும். மாகாணத்தில் மொத்த வளர்ச்சிக்கு பருத்தி, வேர்க்கடலை சாகுபடி மிகவும் அவசியம்.

திரு. அ. பெ. தர்மலிங்கம் : எந்தெந்தக் காலத்தில், எந்தெந்தப் பயிர்களை, எந்தெந்த நிலத்தில் சாகுபடி செய்யவேண்டும் என்பது விவசாயிகளுக்குத்தான் தெரியும். ஆகவே, இந்த முடிவு விவசாயி களைக் கலந்து எடுக்கப்பட்டதா ? அல்லது அதிகாரிகளே இன்ன பயிரைத்தான் சாகுபடி செய்யவேண்டும் என்று கட்டளையிட்டி ருக்கிருர்களா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : விவசாயிகளுடைய நிலைமையை உணர்ந்த நிபுணர்கள் ஆலோசனை செய்து அந்த அடிப்படையில் முடிவு எடுக்கப்பட்டது.

திரு. கே. பொன்னையன் : பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தில் பூமிகள் நிறைய சதுப்பு நிலமாகி விடுகிறது. அந்த இடத்திலாவது நெல் போட அரசாங்கம் உத்தரவு கொடுக்குமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : இம்மாதிரி உப கேள்வி வருமென்று எதிர்பார்க்கவில்லை. அந்த வட்டாரத்தில் சிப்பேஜ் ஏற்படாமல் இருக்க ஏராளமான பணத்தை அரசாங்கம் செலவு செய்துவரு கிறது. ஒவ்வொரு கனலிலும் லைன் செய்திருக்கிருர்கள். ஆகவே நினைக்கக்கூடிய சதுப்பு நிலைமை ஏற்படும் என்று எதிர்பார்க்க வில்லை.

திரு. எம். தண்டாயுதபாணி: கனம் அமைச்சர் அவர்கள் பதிலில் இருந்து புஞ்சைச் சாகுபடிக்கு விடுகிற தண்ணீரைக் கொண்டு நஞ்சை சாகுபடி செய்வதாக கூறுகிருர்கள். அப்படியானல் ஒரு க்யூசெக்ஸ் வாட்டர் எவ்வளவு ஏக்கர்களுக்கு அளிக்கப்படுகிறது ? புஞ்சை சாகுபடிக்கு விடுகிற தண்ணீரைக் கொண்டு நஞ்சை சாகுபடி செய்வது என்றுல் அது அதிகமாக இருக்காதா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : தனிக் கேள்வி வேண்டும்.